**சுகாதார முறைமை மேம்படுத்தல் (மேலதிக நிதியளிப்பு) செயற்திட்டம் - 2021**

சுகாதார முறைமை மேம்படுத்தல் (மேலதிக நிதியளிப்பு) செயற்திட்டத்தின் 2021 நவம்பர் 17 தொடக்கம் 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 ஒக்தோபர் 07 ஆம் திகதிய முறையே எல்4121-எஸ்ஆர்ஜ மற்றும் ஜீ9222-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் மத்திய, வட மத்திய, சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் நான்கு மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. தற்போதைய மூன்றாவது அலையான கொவிட் - 19 தொற்றுநோய் முகாமைத்துவம் காரணமாக மூல செயற்திட்டத்தின் மூல நோக்கத்தை செயற்படுத்த, மேலும் அதிகரித்து வரும் கோரிக்கைகளை பூர்த்தி செய்ய மேற்படி மீள்ஒதுக்கீடு காரணமாக ஏற்பட்ட நிதி பற்றாக்குறையை எதிர்கொள்ளுதல், கொத்தணி உச்ச மருத்துவமனைகளாக உருவாக்கப்படும் ஆரம்ப ஒன்பது செயற்திட்ட மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் ஒரு இரண்டாம் நிலை சிகிச்சை (கொவிட்-19 விடய முகாமைத்துவத்திற்கானது உட்பட) வசதியை உருவாக்குவதற்கு ஆதரவளித்தல், நாட்டில் அதிகரித்து வரும் கொவிட்-19 நிலைமையைக் கருத்தில் கொண்டு தொலைதூர மற்றும் இலத்திரனியல் கற்றலுக்கான வசதிகளை விரிவுபடுத்துதல், அளவிடப்பட்ட செயற்திட்டங்களின் விளைவுகளை வெற்றிகரமாக அமுல்ப்படுத்தி அடைந்துகொள்வதற்காக செயற்திட்ட இறுதித் திகதியை 24 மாதங்களால் அல்லது 2025 நவம்பர் வரை நீடித்தல் மற்றும் கொவிட்-19 தொடர்பான நிதி இடைவெளிகளை எதிர்கொள்வதற்கு ஐ.அ.டொலர் 3 மில்லியன் தொகையை வழங்குவதற்காக ஜப்பான் நிதிய வறுமைக் குறைப்பை அணுகுதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 24,538.5 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 123 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 22,543.5 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 113 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டது. ரூபா 1,995.0 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 நவம்பர் 17 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 நவம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான

அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,328 மில்லியன் கிரயத்தில் 19 வகையான மருத்துவ உபகரணங்களின் 4,400 உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்களை வழங்குநர்களுக்கு வழங்குவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.10.1(இ), 2.11.2, 2.12(அ) மற்றும் 8.9.1 ஆம் வழிகாட்டல்கள் மற்றும் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் 6 (i) (அ) ஆம் உபபிரிவின் ஏற்பாடுகள் மற்றும் 35.41 (ஊ), 35.41 (ஏ) மற்றும் 35.41 (இ) ஆம் இலக்க கேள்வி நிபந்தனைகள் என்பவற்றிற்கு முரணாக இந்த பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் விளைவாக அப் பெறுகைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் முறைமை பாதுகாக்கப்படவில்லை. | இந்த பெறுகைகள் அனைத்தும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் பெறுகை வழிகாட்டலின் இரண்டாவது பந்தியின் பிரகாரம் செய்யப்பட்டுள்ளன. | செயற்திட்டத்தின் செயற்பாடுகள் விதிகள் மற்றும் பிரமாணங்களின் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) தேவைப்பாடு சரியாகக் கண்டறியப்படாததாலும், பெறுகை திட்டமிடப்படாததாலும், கொள்வனவு செய்யப்பட்ட 15 வகையான மருத்துவ உபகரணங்களின் 1,546 உருப்படிகள் 2022 ஏப்ரல் 27 இல் உள்ளவாறு கையிருப்பில் இன்னும் உள்ளன. மேலும், அவசரத் தேவை என குறிப்பிட்டு ஏற்கனவே உள்ள பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து | உபகரணங்களின் சரியான எண்ணிக்கையை கணிக்க முடியவில்லை, அனைத்து மருத்துவமனைகள் மற்றும் ICC நிலையங்களுக்கு பெரும்பாலான | அவசரத் தேவைப்பாடுகள் மற்றும் பெறுகை முறை சரியாக இனங்காணப்பட்டு அதற்கிணங்க உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாத்திரமே கேள்வி கோரப்பட்டதன் மூலம் கேள்வி கோருவதற்கான இயலுமை மட்டுப்படுத்தப்பட்டது. எனினும், 1,546 மருத்துவ உபகரண உருப்படிகள் களஞ்சியத்தில் இருந்ததால் அத்தகைய அவசரத் தேவை இருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை. | உபகரணங்களை விநியோகித்த பின்னர், உபகரணங்களின் மிகுதி தொகை BES களஞ்சியங்களில் இன்னும் உள்ளதுடன் மருத்துவமனைகளின் எதிர்கால தேவைப்பாட்டிற்காக விநியோகிக்கப்படும். | |
| (இ) | உயிர் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட நியம விபரக்குறிப்புக்கள் 11 வகையான மருத்துவ உபகரணங்களின் 1,725 உருப்படிகளை கொள்வனவு செய்வதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் மற்றும் பெறப்பட்ட அங்கீகாரங்ககள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. Defibrillator 50 ஐ கொள்வனவு செய்வதில் ஒரே ஒரு கேள்விதாரர் மாத்திரமே பூர்த்தி செய்ய முடியும் என விபரக்குறிப்பில் மேற்கொண்ட ஒரு சார்பு திருத்தம் காரணமாக, ஏனைய அனைத்து விபரக்குறிப்புக்கள் மற்றும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்த குறைந்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்படாததால் ஏற்பட்ட நட்டம் ரூபா 37 மில்லியனாகும். | கேள்வி ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரக்குறிப்புகளுக்கு இணங்கக்கூடிய கேள்விதாரர்கள் உள்ளனர், ஆனால் அவர்கள் இந்த பெறுகையில் பங்கேற்கவில்லை. | பெறுகை செயன்முறை வெளிப்படையான முறையில் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | இருப்பு கிடைப்பனவு அல்லது விநியோக அட்டவணையை வழங்கி அதற்கேற்ப விநியோகம் செய்யலாம் போன்ற தவறான தகவல்களுடன் கேள்விகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவசர தேவைகளுக்காக மேலதிக இருப்பை வைத்திருக்கும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கடை முறையைப் பின்பற்றி மாத்திரமே கேள்வி கோரப்பட்ட 50 Defibrillators, 35 எடுத்துச் செல்லக்கூடிய ஊடுகதிர் இயந்திரங்கள், 135 Suction Apparatus, 325 High Flow Nasal Oxygen இயந்திரம், 10 Ventilators (Neonatal) ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கான பெறுகைகளில் குறிப்பிடத்தக்க தாமதத்துடன் பொருட்கள் வழங்கப்பட்டன. | இந்த காலப்பகுதியில் மருத்துவ உபகரணங்களுக்கான அதிக தேவை காரணமாக இந்த இருப்புக்களை தனியார் நன்கொடையாளர்கள் வழங்குநர்களிடமிருந்து சுகாதார முறைமைக்கான நன்கொடையாக கொள்வனவு செய்துள்ளனர். எனவே, வழங்குநர்ககளிடம் மேலதிக இருப்பு கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லை. | தவறான தகவல்களை சமர்ப்பிக்கும் வழங்குநர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 35 எடுத்துச் செல்லக்கூடிய ஊடுகதிர் இயந்திரங்களை வழங்குவதற்காக விலைமனு சமர்ப்பித்த கேள்விதாரர்களில் 20 இயந்திரங்கள் மாத்திரமே தகுதிபெற்று | கேள்வி ஆவணத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் தண்டப்பணம் கழிக்கப்பட்டுள்ளது. | தவறான தகவல்களைச் சமர்ப்பித்த வழங்குநர்களிடமிருந்து முழு நட்டமும் |

| | | |
|---|---|---|
| நான்காவது குறைந்த கேள்வியை சமர்ப்பித்த கேள்விதாரரருக்கு வழங்கப்பட்டதுடன் எட்டாவது குறைந்த கேள்விதாரருக்கு 15 இயந்திரங்களுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டது. 15 இயந்திரங்களை வழங்குவதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்ட வழங்குநர் கட்டளை கிடைத்தவுடன் 05 இயந்திரங்களையும் 02 வாரங்களுக்குள் 10 இயந்திரங்களையும் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்த போதிலும், 70 நாட்கள் காலதாமதத்தின் பின்னர் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இவ்வாறான தவறான தகவல்களின் அடிப்படையில் வழங்குநரை தெரிவு செய்தமை மற்றும் 20 இயந்திரங்களுக்கான ஒப்பந்தத்தை வழங்கிய தகுதி வாய்ந்த ஆகக்குறைந்த கேள்விதாரருக்கு 35 இயந்திரங்களின் ஒப்பந்தத்தை வழங்காதமை காரணமாக ஏற்பட்ட நட்டம் ரூபா 37.7 மில்லியனாகும். தவறான தகவல்களைச் சமர்ப்பித்து உபகரணங்களை வழங்குவதில் தாமதம் செய்ததற்காக வழங்குநர்களிடமிருந்து ரூபா 4.4 மில்லியன் தண்டப்பணம் மாத்திரமே அறவிடப்பட்டது. | | அறவிடப்பட வேண்டும். |

## 2.2 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மத்திய வங்கி கூற்றுக்களின் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்கு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,434.46 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 12.06 மில்லியன் நிதியளிக்கப்பட்டது. எனினும், இந்தத் தொகையில் ரூபா 1,996.37 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9.93 மிலிலயன் மாத்திரமே செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டது. அதற்கிணங்க 17.99 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 438.09 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 2.13 மில்லியன் இச் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் 2021.10.17 முதல் நடைமுறைக்கு வந்ததுடன் நடைமுறைக்கு வரும் திகதிக்கு 12 மாத காலத்திற்கு முன்னர் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட மீள்நிரப்பல் செலவினங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டது. சுகாதார அமைச்சின் உயிர் மருத்துவ பொறியியல் பிரிவு வழங்கிய பெறுகைப் பட்டியலின் பிரகாரம் ரூபா 2,434.46 மில்லியன் கூட்டுமொத்த தொகை | செயற்திட்டத்தை திட்டமிட்டவாறு செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிதியளிக்கப்பட்டுள்ள போதிலும் கொடுப்பனவுகளை வெளியிட வேண்டியிருந்த போது, உயிர் மருத்துவ பொறியியல் பிரிவு சமர்ப்பித்த சில ஆவணங்கள் கொடுப்பனவிற்கு தகுதிபெற்றிருக்கவில்லை. | |
| (ஆ) | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் மீளாய்வுக் காலப்பகுதிக்கான திட்டமிடப்பட்ட நிதி செயலாற்றல் ஐ.அ.டொலர் 13.88 மில்லியனாக காணப்பட்ட போதிலும் உண்மையான நிதி செயலாற்றல் 71.54 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 9.93 மில்லியன் மா்திதரமேயாகும். | உயிர் மருத்துவ பொறியியில் பிரிவால் இந்த பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது டன் நன்கொடையாளர் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து விளக்கத்தை பெற்றுக்கொள்வதற்கும் மீள்நிரப்பலிற்கான இறுதி அங்கீகாரத்தை வழங்குவதற்கும் கணிசமான நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அநன் பிரகாரம் உண்மையான நிதிச் செயலாற்றல் 71.54 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 9.93 மில்லியன் ஆக காணப்பட்டது. | செயற்திட்டம் திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |